முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 165/2022

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இருளப்பன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மீனாட்சி சுந்தரம் | கிராமம் | : பொம்மநாயக்கன் பாளையம் |
| வயது | : 53 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 24-09-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதி தன்னுடைய சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுத்தவர் ரத்தினசாமி, வாதிக்கு கிரயம் கொடுத்தவர்கள் ரத்தினசாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். வாதி கிரயம் பெறும்போது ரத்தினசாமி உயிருடன் இல்லாததால் அவரின் வாரிசுகள் கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதிக்கு பதிவு ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவாச் சொத்து பாத்தியமானது என்றால் சரிதான்.

2. வாதி கிரயம் பெற்ற சொத்து DTCP அங்கீகாரம் பெறப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது தவறுதலாக பெறப்பட்டது. தவறுதலாக பெறப்பட்டது என்பதனால் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதா என்றால் ரத்து செய்யப்பட்டது. அது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நானும் வாதி இருக்கும் வேலன் அவென்யூ பகுதி அங்கீகாரம் பெறப்படவில்லை என்றால் சரிதான். ரத்தினசாமி தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தியதாகவும் பின்பு அதை ரத்து செய்ததாகவும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் எதிருரையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. ரத்தினசாமி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததது தொடர்பாக சட்டம் சார்ந்த நீதி சார்ந்த நடவடிக்கையும் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். ரத்து ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரத்தினசாமியின் வாரிசுகள் ரத்தினசாமி இறப்பிற்கு பின்னிட்டு ரத்து செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் சொத்துக்களையும் சேர்த்து வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பதிவு ஆவணத்தின்படி எனக்கு மனைப்பிரிவு எண் 5 பாத்தியப்பட்டது என்றால் சரிதான். லே அவுட் பாதைகள் பொது இடங்களில் எனக்கு பாத்தியமுள்ளது.

4. ரத்தினசாமியின் வாரிசுகளால் ரிசர்வ் சைட் எனச் சொல்லப்படும் இடம் கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பாதைகள் குறித்து எவ்வித கேள்வியும் எழவில்லை. ஆனால் ரிசர்வ் மனையிடத்தில் எனக்கு பாத்தியம் இல்லை எனச் சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியமுண்டு. வாதிக்கு கிரயம் கொடுத்த பிறகு அந்த கிரயம் செல்லாது என எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாவட்ட பதிவு அலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். மாவட்ட பதிவு அலுவலகத்தில் மனு செய்து நடவடிக்கை மேற்கொண்டது பற்றி முதல் விசாரணை, எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

5. வாதிக்கு எந்த ஆண்டு தாவாச் சொத்து கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாதி அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் 3 முறைக்கு மேலும், காவல் கட்டுப்பாட்டு அறை 100–க்கு தொடர்பு கொண்டு 5 முறைக்கு மேலும் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். விசாரணைக்கு புகார் கொடுத்தவர் வரவில்லை. புகார் கொடுத்த நபர் வரவில்லை என்று எனது முதல் விசாரணை, எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதி புகார் கொடுத்து விட்டு விசாரணைக்கு வரவில்லை என தாவாவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தில் நாங்கள் விநாயகர் சிலை வைத்து வாதிக்கு இடையூறு செய்ததால் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் காவல் நிலையத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டனர்

என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த பின்னிட்டும் நாங்கள் அத்துமீறல் செய்து வாதிக்கு தொடர்ந்து இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் நாங்கள் விநாயகர் சிலை வைத்து வாதிக்கு இடையூறு செய்ததால் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது அங்கு சிலை வைக்கக்கூடாது என காவல்துறையினர் எச்சரித்தனர் என்றால் சரியல்ல. வாதியும் வந்து விநாயகர் சிலையை வழிபட்டு சென்றார்.

7. வாதியும் வந்து வழிபாடு செய்ததற்கு புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தில் சிலை எதுவும் வைக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. ஊர் பொது மக்கள் அனைவரும் தான் ரிசர்வ் இடத்தில் சிலை வைத்துள்ளனர். தாவா எனக்கும் பழனியப்பனுக்கும் எதிராக தாக்ல செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்து பொறுத்து மற்ற நபர்கள் யாரும் இடையூறு செய்யவில்லை அதனால் தான் வாதி எங்கள் இருவர் மேலும் தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 13 நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8. தன்னாசி கருப்பன் என்ற நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட சொத்தில் இடையூறு செய்ய எனக்கு உரிமையில்லை. அதனால் தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.09.24 18:01:02 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.